# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 07.09.2018 | **1)** தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளான முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, மீளவிட்டான், சங்கரபேரி தூத்துக்குடி ரூரல் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 27Villages Thoothukudi Union, 3MGD W.S.S. (Board owned) Bharathinagar CWSS, CWSS 10 SAYARPURAM Perungulam 43 and 45 State source Habitation ஆகிய திட்டத்தின் கீழ் தினசரி 4 எம்.எல்.டி. வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.<br>தற்போது மாநகராட்சி பகுதிகளில் ரூ. 282.44 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வந்த குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் (நான்காவது பைப்லைன்) முடிவுற்று, மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளுக்கு வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி திட்டப்பணிகள் முடிவுற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளபடியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்படி திட்டத்தின் கீழ் மேற்படி பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் விநியோகத்தினை வரும் 30.09.2018 முதல் முழுமையாக நிறுத்தம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/551/12 | 146) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |
| | 2) முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, அவர்களின் தலைமையில் 01.09.2017 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டத்தின் 5வது மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளில் தீர்மானம் எண்.11ல் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் நுண் உரக்கிடங்கு அமைக்கும் பணியினை உள்ளாட்சி அமைப்புகளில் ஒரே மாதிரியான மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதியளித்துள்ளதை முன்னிட்டு இம்மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.88 நாள் 06.10.2017ல் மாநகராட்சி பல்வேறு வார்டு பகுதிகளில் 16 நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.<br>இந்நிலையில் மேற்கண்ட மாமன்றத் தீர்மானப்படி வார்டு எண். 50 செல்சீனி காலனி பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு | 147) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | சொந்தமான இடத்தில் நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணிக்கு இடம் தேர்வு செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ள முற்பட்டபோது மேற்படி பகுதியை சுற்றியுள்ள பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததின் பேரில் தொடர் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டது.<br>மேற்படி செல்சீனி காலனி பகுதியினை சுற்றியுள்ள வார்டு பொது மக்கள் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், முதல்வர் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி வளாகத்தில் மேற்படி நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணிக்கு இடம் ஒதுக்கீடு செய்து தர கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல்வர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. தூத்துக்குடி அவர்களின் கடிதம் எண். 6855/திவ1/2018 நாள் 15.08.2018ஆம் தேதிய கடிதத்தில் மேற்படி மருத்துவ கல்லூரி வளாக தென்பகுதியில் 30மீ X 40மீ அளவில் நுண் உயிர் செயலாக்கம் மையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள்.<br>எனவே தூத்துக்குடி, அரசு மருத்துவ கல்லூரி வளாக தென்பகுதியில் 30மீ X 40மீ அளவில் நுண் உரம் செயலாக்கம் மையம் கட்டிடம் அதே ஒப்பந்த விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/1158/2015 (ம.ப.எண்.133/17–18) | |
| | **3)** தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட சுந்தர் நகர் பூங்காவில் சமுதாய நலக்கூடம் அமைந்துள்ளது. அவ்விடத்தின் கட்டிட பராமரிப்பு பணிகள் முடிந்த நிலையில் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தூத்துக்குடி அவர்களின் கடிதத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி தேசிய நகர்ப்புற வாழ்வாதார மையம் (City Livehood centre CLC) மகளிர் திட்டத்திலுள்ள சுய உதவிக்குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் மூலம் Paper Plate Unit தொழில் நடத்த மேற்படி இடத்தை இலவசமாக வழங்க கோரப்பட்டுள்ளது.<br>மேற்படி இடத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் சுய தொழிலை ஊக்குவிக்கும் வகையில் பொது மக்களின் நலனுக்கான Paper Plate Unit மூலம் தொழில் அமைக்க இருப்பதாலும், அரசு சார்ந்த பயன்பாட்டின் அடிப்படையில் உள்ளதாலும், மேற்படி கட்டிடத்தை முறையாக பராமரிக்கப்படுதல் வேண்டும். தவிர மேற்படி கட்டிடத்திற்கான மின்கட்டணத்தினை மேற்படி சுய உதவிக்குழு கூட்டமைப்பு வாயிலாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் Paper Plate Unit மூலம் தொழில் மேற்படி கட்டிடத்தில் இலவசமாக உரிய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுடன் நடத்த அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** அனுமதிக்கலாம்<br>ந.க.எண். சி1/ 3158/2018 | **148)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 4)இம்மாநகராட்சில் செயல்படுத்தப்படும் பொது நிதி பணியில் கிழக்கு மண்டல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை மனிதகுழி மூடிகள் அனைத்தையும் சாலை மட்டத்திற்கு உயரம் கூடுதலாக கட்டும் பணிக்காக ரூ. 30,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 21.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 21.08.2018 அன்று திறக்கப்பட்டது.<br>1. திரு. K. Sureshkumar<br>மதிப்பீட்டை விட 0.38 % குறைவு ( ரூ 24,10,125.00)<br>2. திரு. T. Murugan<br>மதிப்பீட்டை விட 0.39 % அதிகம் ( ரூ 24,10,125.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையினைவிட குறைவான தொகை குறிப்பிட்டு கொடுத்துள்ள திரு. K. Sureshkumar என்பவரின் (மதிப்பீட்டை விட 0.38 % குறைவு (ரூ. 24,10,125.00) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மதிப்பீட்டை விட 0.38% குறைவாக கொடுத்த திரு K. Sureshkumar ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/01984/2018 | 149) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 49 கால்டுவெல் காலனி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2016 – 17இன் கீழ் ரூ. 5.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலக கட்டிடம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.<br>மேற்படி நூலக கட்டிடத்தினை நல்லமுறையில் பாதுகாத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தலைவர் மற்றும் செயலாளர், கால்டுவெல் காலனி நற்பணி மன்றம் அவர்களின் 24.08.2018ஆம் தேதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.<br>எனவே மேற்கண்ட வார்டு எண். 49 கால்டுவெல் காலனி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள நூலக கட்டிடத்தினை நல்லமுறையில் பராமரித்து பாதுகாக்கும் பொருட்டும் மேற்கண்ட வார்டு பகுதி பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் வாசகர்கள் பயன்பெறும் வகையில் மாநகராட்சி நிபந்தனைகளுக்கு உட்படுத்தி கால்டுவெல் காலனி நற்பணி மன்றத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப் படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/5078/2016 | 150) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 6) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும். பொது நிதி பணியில் தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வடக்கு பீச்ரோட்டில் (இந்திராகாந்தி சிலை அருகில்) உள்ள சிறுபாலம் கட்டும் பணிக்காக ரூ 14,75,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 29.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>1) திரு. T. முருகன்<br>மதிப்பீட்டை விட 8.09 % அதிகம் (ரூ. 13,25,618.00)<br>2) திரு. J. சுரேஷ் ஜெயக்குமார்<br>மதிப்பீட்டை விட 17.92 % அதிகம் (ரூ. 14,46,178.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. T. முருகன் என்பவரின் (மதிப்பீட்டைவிட 8.09% அதிகம் (ரூ. 13,25,618.00) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது.<br>1) திரு. T. முருகன்<br>மதிப்பீட்டை விட 2.89% அதிகம் (12,61,795.00) கொடுத்துள்ளார்.<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை கொடுத்துள்ள திரு. T. முருகன் என்பவரின் ஒப்பந்தப் புள்ளியானது (மதிப்பீட்டை விட 2.89% அதிகம் (ரூ. 12,61,795.00) பொறியியல் கையேடு பிரிவு II விதி எண். 2.7.2–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5% வரை அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையானது மதிப்பீட்டுத் தொகையினை விட 2.89% மட்டுமே அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்புதல் அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மதிப்பீட்டை விட 2.89 % அதிகமாக கொடுத்த திரு. T. முருகன் ஒப்பந்தக்காரருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/1848/2018 | 151) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது |
| | 7) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 16580/18/ஆர் 4 நாள் 24.08.2018ல் மாநகராட்சிப் பணிகளில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களுக்கு சார்பு செயலாளர் நகர்புற வளர்ச்சி அமைச்சகம், புது டெல்லி அவர்களின் கடிதம் எண் N/11025/26/2003 UCD, UCD/LSG Section நாள் 17.12.2009ல் தெரிவிக்கப்பட்ட படி சேவைக்கட்டணங்களை வசூல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி 17.12.2009ம் நாளைய மத்திய நகர்புற உள்ளாட்சி அமைப்பு சார்பு செயலாளரின் கடிதத்தில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் சிவில் வழக்கு எண். 9458–63/2003 மீது பிறப்பிக்கப்பட்ட | 152)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தீர்ப்புரையின்படி மத்திய அரசுக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி உள்ளாட்சி அமைப்புகள் சேவைக் கட்டணமும் வசூல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>1) சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் வழங்கப்படும் சேவைகளுக்கு ஏற்ப சொத்துவரியில் 75% , 50 % அல்லது 33 1/3% அதிகமாக சேவைக் கட்டணங்களை பெறுதல் வேண்டும் எனவும் இதன்படி முழுவதுமான அடிப்படை சேவைகள் வழங்கப்படின் 75 சதவீதமும் பகுதியாக சேவைகள் வழங்கப்படின் 50 சதவீதமும் அடிப்படை சேவைகள் ஏதும் வழங்கப்படாத மத்திய அரசு அலுவலக கட்டுமானங்களுக்கு 33 1/3 சதவீதமும் சேவை வரியாக வசூல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>2) இவ்வாறான சேவைக் கட்டணத்தினை ஒருமித்த ஒப்பந்தம் மூலம் (MUTUAL CONSENT) பெறவும் இதல் உடன்பாடு ஏற்படாத நிலையில் 3 உறுப்பினர் அடங்கிய சமரச குழு (MEDIATION COMMITTEE) மூலம் தீர்வு காண இவ்வாறு அமைக்கப்படும் குழுவில் மாநகராட்சி சார்பாக ஒரு அலுவலரும் மத்திய அரசு துறை சார்ந்த அலுவலர் ஒருவரும் மாநகராட்சி நிர்வாகத்துறை சார்ந்த அலுவலர் ஒருவரும் இருத்தல் வேண்டும் எனவும்,<br>3) இவ்வாறு அமைக்கப்படும் குழு மூலமாக தீர்வு காண இயலாத நிலையில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் இதற்கான தீர்வினை தீர்ப்பாயம் மற்றும் நீதிமன்றங்களின் மூலம் தீர்வுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் எனவும்,<br>4)இவ்வாறு வசூல் செய்யப்படும் சேவைக்கட்டணமானது மாநில அரசால் வசூல் செய்யப்படும் சேவைக் கட்டணத்தினை காட்டிலும் கூடுதலாக இருத்தல் கூடாது எனவும் தவிர மாநில அரசால் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் ஏதும் இருப்பின் அதே சலுகைகள் மத்திய அரசு அலுவலக சொத்துக்களுக்கும் பொருந்தும் எனவும் ,<br>5)ரயில்வே துறையினர் சேவைக்கட்டணம் செலுத்த முன்வராத தேர்வுகளில் சட்ட ரீதியான சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>எனவே மேற்கண்ட அறிவுரைகளின்படி மத்திய அரசுக்கு சொந்தமான சொத்து மக்களிடமிருந்து தூத்துக்குடி மாநகராட்சியில் இருந்து வழங்கப்படும் சேவைகளின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட சதவீதத்தை சேவைக்கட்டணங்களாக வசூல் செய்திடவும், அடிப்படை சேவைகள் வழங்கப்படாத மத்திய அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் பொறுத்தமட்டில் 33 1/3 சதவீதம் சேவைக்கட்டணம் வசூல் செய்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்<br>(அ16/14937/11) | |

| | | |
|---|---|---|
| | 8) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் சீர்மிகு நகரம் 2017–2018 பணியில் தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் மாநகராட்சி பல்வேறு வார்டுகளில் பொதுமக்களில் கூடும் பகுதிகளில் மின் கழிப்பறை (E- Toilet) அமைக்கும் பணிக்காக ரூ. 1,28,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு ரூ 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி உறை 06.08.2018 அன்று திறக்கப்பட்டது.<br>1) M/s. Eram Scientific Solution Pvt. Ltd.,<br>மதிப்பீட்டை விட 0.79% குறைவு (ரூ. 1,25,00,000.00)<br>வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான தொகை கொடுத்துள்ள M/s. Eram Scientific Solution Pvt. Ltd., என்பவரின் ( மதிப்பீட்டை விட 0.79% குறைவு (ரூ. 1,25,00,000.00) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. ஒப்புநோக்கு பட்டியல்<br>1) M/s. Eram Scientific Solution Pvt. Ltd.,<br>மதிப்பீட்டை விட 1.27% குறைவு (ரூ. 1,24,40,000.00)<br>மதிப்பீட்டை விட குறைவான தொகை கொடுத்துள்ள M/s. Eram Scientific Solution Pvt. Ltd., மதிப்பீட்டை விட 1.27% குறைவு (ரூ. 1,24,40,000.00) ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேற்படி மின் கழிப்பறை ((E- Toilet) க்கு ஓராண்டு பராமரிப்பு காலம் பின்னர் மேலும் 5 ஆண்டுகளுக்கான கட்டணம் உதிரிபாகங்கள் உட்பட பராமரிப்பு பணிக்கான மின்கழிப்பறை ஒன்றுக்கு ரூ 2,40,000/– வீதம் 20 எண்ணத்திற்கு ஆகும் செலவீனம் ரூ 48,000.00/– தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மதிப்பீட்டை விட 1.27% குறைவாக கொடுத்த M/s. Eram Scientific Solution Pvt. Ltd ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) 20 மின் கழிப்பறைக்கு உரிய 5 ஆண்டு பராமரிப்பு செலவீனத் தொகையினை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015 (W) | 153) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 7.9.2018

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி